

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.11.2024) முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு உள்ளார்.

எஸ்.எல்.ப.சச்சிதானந்தம், திப்பம்பட்டி ஆறுச்சாமி, காசி பங்கேற்பு!

பவானி, கோபி, பவானிசாகர், அந்தியூர் சட்டமன்ற தொகுதி

# தலைமைக் கழக தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் அறிக்கை!



ஈரோடு, நவ.10-

ஈரோடு வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 104 பவானி, 106 கோபி, 107 பவானிசாகர், 105 அந்தியூர் சட்டமன்ற தொகுதியில், தொகுதி பார்வையாளர்கள் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக ஆதிதிராவிடர் நலக் குழு இணை செயலாளர் திப்பம் பட்டி ஆறுச்சாமி, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் காசி ஆகியோர் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் BLA2 உறுப்பினர்கள் சரிபார்க்கும் பணியை நேரடியாகச் சென்று ஆய்வு செய்து தேர்தல் கள பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார்கள்.

104 பவானி சட்டமன்ற தொகுதியில் 3.11.2024 ஞாயிற்றுக்கிழமை பவானி நகராட்சி பவானி ஐயப்ப சேவா மண்டபத்திலும், பவானி வடக்கு ஒன்றியம் ஜம்பை பேரூர், குருப்ப நாயக்கன்பாளையம், பாலாஜி நகர், கழக அலுவலகத்திலும், அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம் (ஒத்தடம் பேரூர்), சித்தார், ஹரிகிருஷ்ணா திருமண மண்டபத்திலும், அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம் (அம்மாபேட்டை பேரூர், நெருஞ்சி பேட்டை) அம்மாபேட்டை, தேவி திருமண மண்டபத்திலும்,

106கோபி சட்டமன்ற தொகுதியில் 3.11.2024 கோபி தெற்கு ஒன்றியம், சிறுவலூர், ராஜா மஹாலிலும், கோபி நகராட்சி, கோபி, ல.கள்ளிப்பட்டி, வி.எம்.கே.கல்ச்சுரல் ஹாலிலும் தொகுதி பார்வையாளர் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் BLA 2 உறுப்பினர்கள் சரிபார்க்கும் பணியை நேரடியாக ஆய்வு செய்து தேர்தல் கள பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

107 பவானிசாகர் சட்டமன்ற தொகுதியில் 5.11.2024 அரியப்பம்பாளையம் பேரூர், அரியப்பம்பாளையம் பேரூர் கழக செயலாளர் இல்லத்திலும், சக்தி தெற்கு ஒன்றியம், கோணமூலை எஸ்.எஸ்.மஹாலிலும், கே.என்.பாளையம் பேரூர், கே.என்.பாளையம் பேரூர் கழக அலுவலகத்திலும், சக்தி வடக்கு ஒன்றியம், சக்தி, அத்தாணி ரோடு, கவுடா மஹாலிலும், சக்தி நகரம், நாடாளுமன்ற அலுவலகத்திலும் 6.11.2024 புதன்கிழமை புளியம்பட்டி நகரம், பு.புளியம்பட்டி அவைத்தலைவர் இல்லத்திலும், பவானிசாகர் தெற்கு ஒன்றியம், கனகரசம் பாளையம், சமுதாய கூட்டத்திலும், பவானிசாகர் வடக்கு ஒன்றியம் பவானிசாகர் பேரூர், பவானிசாகர் பேரூர் கழக செயலாளர் அலுவலகத்திலும்,

7.11.2024 வியாழக்கிழமை தாளவாடி மேற்கு, தாளவாடி கிழக்கு, ஆசனூர் பாமா ஹோட்டலில் தொகுதி பார்வையாளர் கழக ஆதிதிராவிடர் நலக் குழு இணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி BLA 2 உறுப்பினர்கள் சரிபார்க்கும் பணியை நேரடியாக ஆய்வு செய்து தேர்தல் கள பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

105 அந்தியூர் சட்டமன்ற தொகுதியில் 5.11.2024 செவ்வாய்க்கிழமை கோபி வடக்கு ஒன்றியம், பி.மேட்டுபாளையம் பேரூர், கூகலூர் பேரூர், ஒத்த குதிரை மஹா மஹாலிலும், டி.என்.பாளையம் ஒன்றியம், வாணி புத்தூர் பேரூர், கள்ளிப்பட்டி ஒன்றிய கழக அலுவலகத்திலும்,

6.11.2024 புதன்கிழமை அந்தியூர் ஒன்றியம், அந்தியூர் பேரூர், அத்தாணி பேரூர், அந்தியூர், பர்கூர் ரோடு, கே.எம்.பி. திருமண மண்டபத்திலும், அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம், சனி சந்தை கொங்கு கலைமகள் திருமண மண்டபத்திலும் கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் காசி BLA 2 உறுப்பினர்கள் சரிபார்க்கும் பணியை நேரடியாக ஆய்வு செய்து தேர்தல் கள பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

# திருவாரூர் புள்ளமங்கலம் அரசு மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள்!

## மாவட்ட மருத்துவஅணி சார்பில் பூண்டி.கலைவாணன் வழங்கினார்!

திருவாரூர், நவ.07 -

திருவாரூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில் திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புள்ளமங்கலம் துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் விழா மாவட்ட கழக செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது.

மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளரும், தஞ்சாவூர் மாநகர துணை மேயருமான மரு.அஞ்சுகம் பூபதி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். விழாவினை மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் மரு. ஷர்மிளா பானு முன்னின்று நடத்தினார்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின் படியும், தமிழ்நாடு துணை முதல்வர் இளைஞர் அணியின் மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடனும், திருவாரூர் மாவட்ட மருத்துவ அணியின் சார்பில் மாவட்டம் எங்கும் கிராமப்புற பகுதிகளில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ கருவிகளை திருவாரூர் மாவட்டதிமுக மருத்துவர் அணி வழங்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக திருவாரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புள்ளமங்கலம் அரசு துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் விழா புள்ளமங்கலம் துணை சுகாதார நிலையத்தில் நடைபெற்றது. விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினரும் தி.மு.க. மாவட்ட செயலாளருமான பூண்டி.கே.கலைவாணன் தலைமைஏற்றார்.

மன்னார்குடி கிழக்கு தி.மு.க. ஒன்றிய செயலாளர் ஐ.வி.குமரேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.செல்வம் ஊராட்சி மன்ற தலைவர் பானுமதி ஆகியோர் முன்னிலை ஏற்றனர். மாவட்ட மருத்துவர் அணியின் தலைவர் மருத்துவர் ஜெ. சரவணன் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட மருத்துவர் அணியின் அமைப்பாளர் மரு.திவாகரன் சுபாஷ் நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார். விழாவில் மருத்துவமனைக்கு தேவையான நோயாளிகளுக்கு பயன் தரும் வகையிலான 25 ஆயிரம் ரூபாய்க்கும் மேற்பட்ட மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை நிலைய மருத்துவ அதிகாரி மருத்துவர் மரு.கார்த்திக் மற்றும் மரு. ராணி முத்துலட்சுமி, ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

விழாவில் மாவட்ட மருத்துவர் அணியின் துணைத் தலைவர்கள் மரு. வெங்கட்ராமன், மரு.மலர்க்கொடி, பாலசுந்தரம் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மரு.சக்தி அபர்ணா, மரு.திருப்புகழ் செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். விழா நிறைவில் விழாவை முன்னின்று நடத்திய மாவட்ட மருத்துவ அணையின் துணை அமைப்பாளர் மரு. ஷர்மிளா பானு அனைவருக்கும் நன்றி கூறினார்.

நிகழ்வில் பொதுமக்களும் தி.மு.க. நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் மருத்துவமனை அலுவலர்களும், செவிலியர்களும் பங்கு பெற்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் - ஆவுடையார்கோவிலில்

# புதிய வழித்தட பேருந்து சேவை!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, நவ.10-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் பேருந்து நிலையத்திலிருந்து, புதிய வழித்தட பேருந்து சேவையினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 07.11.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொதுமக்களுக்குத் தேவையான, குடிநீர் வசதி, சாலை வசதி, பேருந்து வசதி, சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி புதிய வழித்தட பேருந்து சேவை துவக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், புதுக்கோட்டை மண்டலம் சார்பில் இந்த பேருந்து சேவையானது, ஆவுடையார்கோவிலில் இருந்து காலை 7.25 மணிக்கு புறப்பட்டு பன்னியூருக்கு சென்றடைகிறது. இதே போன்று பன்னியூரில் இருந்து காலை 7.45 மணிக்கு புறப்பட்டு ஆவுடையார்கோவிலுக்கு சென்றடைகிறது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே இப்பகுதி பொதுமக்கள் அனைவரும் இந்த பேருந்து சேவையினை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.






விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம் திறப்பு விழா

முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு விழா

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

நாள்: 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 9.45 மணி, இடம்: பட்டம்புதூர், விருதுநகர்

ரூ.101 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைத்தல்

ரூ.417 கோடியில் 57,556 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்



புதிய ஆட்சியர் அலுவலகக் கட்டடம், விருதுநகர்

செ.ம.தொ.இ./1130/வரைகலை/2024

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

நா. முருகானந்தம்,இ.ஆ.ப.,
தலைமைச் செயலாளர்

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009